# பலஸ்தீனின் புவிசார் - அரசியல் முக்கியத்துவங்கள்

**பேராசிரியர். வை. நந்தகுமார்,**
**தென் கிழக்குப் பல்கலைக் கழகம்.**

பலஸ்தீனின் புவிசார் - அரசியல் முக்கியத்துவங்கள் என நோக்கும் போது, பலஸ்தீன் இஸ்லாமியரது புனித பூமி என்ற வகையில் முன்னிலையில் நிற்கின்றது. முஸ்லிம்கள் மூன்று பள்ளிகளுக்கு புனித யாத்திரையை மேற்கொள்ள முடியும். கஃ பதுல்லாஹ், மஸ்ஜிதுன் நபவி, மஸ்ஜிதுல் அக்ஸா என்ற மூன்றுமே அவை. இப் புனித பள்ளிகள் அமைந்துள்ள மக்கா, மதீனா, குத்ஸ் ஆகிய மூன்று புனித நகரங்களையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்துப் பார்க்க முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவற்றுக்கிடையிலான புனிதத் தன்மைகளின் இறுக்கமான தொடர்புகளை மக்கள் சரியாகப் புரிந்து கொள்வதில்லை. இவை அல்லாஹ் வஹி இறக்கிய இடங்கள் மட்டுமல்ல. அவனது மகத்தான கிலாபத் பணியை நிறைவேற்றுவதற்காக வரலாற்று ரீதியாக பல மகத்தான நிழ்வுகள் நிகழ்ந்த இடங்களாகும். புவியியல் ரீதியாக வஹி எவ்வாறு நகர்ந்து, பரிமாற்றப்பட்டது என்ற ஒழுங்கையும் இம் மூன்று பிராந்தியங்களின் இடஅமைவினூடாகக் கண்டு கொள்ளலாம். இதனால் பலஸ்தீன் ஒரு புனித பூமி என்ற வகையில் சிறப்பிடத்தைப் பெறுகிறது.

மேலும் சிறப்பாக விளக்குவதாயின், அல்குர் ஆனில் உள்ள வத்தீனி வஸ்சைத்தூனி என்ற ஆயத்தை நோக்கும் போது வத்தீனி என்பது அத்தி மரத்தின் மீது சத்தியமாக என்றும், வஸ்சைத்தூனி என்பது செய்தூன் மரத்தின் மீது சத்தியமாக என்றும், இவற்றின் பொருள் அமையப்பெறுகிறது. இதனை மிக ஆழமாக நோக்குமிடத்து, பலஸ்தீனில் அதிகமான செய்தூன் மரங்கள் உள்ளதால் இந்த செய்தூன் என்ற வாசகம் பைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலையே விளக்குவதாக முபஸ்ஸிரீன்கள் குறிப்பிட்டுள்ளனர். இதன் மூலம் பலஸ்தீனத்திற்கும் இஸ்லாத்துக்கும் இடையிலான தென்மையான

தொடர்புகள் எத்தகையது என்பது நன்கு புலனாகிறது.

பலஸ்தீன் மத்திய கிழக்கின் மையமாக மட்டுமன்றி, இருதய நிலமாக உலகின் மையத்தில் அமையப்பெற்றிருத்தல், இதன் இடஅமைவின் சிறப்பினையும், இயற்கை அழகின் வளப்பினையும் உணர்த்துகிறது. மேலும் இது கிழக்கின் திறவுகோலாகவும் இஸ்லாமிய உலகின் நுழை வாயிலாகவும் அமைப்பெறுகிறது.

ஜெருசலம் என்பதை **"Darul Islam"** என அழைப்பதே பொருத்தமுடையது. அதாவது சொர்க்கத்தின் நுழைவாயில், அல்லது சாந்தி சமாதானத்தின் உறைவிடம் என்றும் கூறலாம்.

இத்தகைய புனித சுவர்க்க பூமியான பலஸ்தீன் யூதர்களின் ஆக்கிரமிப்பால் இன்று ஒரு யுத்த பூமியாகக் காட்சியளிக்கிறது. பலஸ்தீனில், யூதர்களினால் மேற்கொள்ளபட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகப் பலஸ்தீனியர்கள் மேற்கொண்டு வரும் தார்மீகப் போராட்ட நடவடிக்கைகளை நான்கு முக்கிய கட்டங்களாக வகுத்து நோக்கலாம்.

## முதலாவது கட்டம்
## பிரித்தானிய ஆக்கிரமிப்பு (1917 - 1948).

பிரித்தானியர்கள் முதலில் 1917 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பலஸ்தீனத்தின் வட பகுதியை ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து, இப்பகுதியில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் ஆரம்பித்ததெனலாம். இறுதியில் 1948 ஆம் ஆண்டு முழுப் பலஸ்தீனையும் தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார்கள். யூதர்கள் மேற்கொண்ட இத்திட்டமிட்ட நடவடிக்கைகளை அவதானித்த பலஸ்தீனர்கள் தம்மை இலக்காகக் கொண்ட இந்தக் கொடூர அநீதிகளுக்கு எதிராக விழித்தெழுந்து போராட ஆரம்பித்தார்கள். 19ஆம் நூற்றாண்டு காலப் பகுதியின் முதல் தசாப்தத்தில் பலஸ்தீனிய மக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் நன்கு ஒழுங்கு படுத்தப்பட்ட குழு ரீதியான ஒரு போராட்டமாகக் காணப்படாவிட்டாலும், அல் ஹாஜ் அமீல், அல் ஹுஸைனி போன்ற சில தனி மனிதர்களால்

முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் வரலாற்றுரீதியாகச் சிறப்பிடத்தைப் பெறுகின்றன. இவற்றின் பெறுபேறுகளால், 19ம் நூற்றாண்டின் இரண்டாவது தசாப்த காலப் பகுதியில் பலஸ்தீனிய மக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் ஒழுங்கு படுத்தப்பட்ட குழுரீதியான போராட்டங்களாக வடிவமைக்கப்பட்டன.


## இரண்டாவது கட்டம் :
## பலஸ்தீனப் போராட்டமும் அரபுத் தேசியவாதமும் (1949 - 1967)

பலஸ்தீனப் போராட்டத்தில் இக்காலப் பகுதி ஒரு திருப்புமுனை என்பதை விட ஒரு மந்தநிலை காணப்பட்ட காலப் பகுதியாகவே காணவேண்டும் கம்யூனிச சமத்துவக் கோட்பாட்டின் தாக்கம் அரபுக் களங்களையும் தாவியது. இதன் நேரடி விளைவாக அரபுத் தேசியவாதம் பலஸ்தீனப் போராட்டக் குழுக்களுக்கு மத்தியில் தலைதூக்கியது. இதனால் பலஸ்தீனப் போராட்டம் பலவீனப்படுத்தப்பட்டது. கடைசியில் 1967 ஆம் ஆண்டு அரேபியப் படைகள் எதிரிகளுக்கு முன்னால் தோல்வியைக் கண்டன. இதனால் முழுப் பலஸ்தீனும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதுடன் இஸ்ரேல் ஒரு தனி நாடாகவும் உத்தியோக பூர்வமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. மேலும் இஸ்ரவேல் நாடு என்ற பெயரும் உலகப்படத்தில் முதல் முதலாகப் பதியப்பட்டது

பலஸ்தீனியரின் போராட்டம் இக்காலப் பகுதியில் தோல்வியைத் தழுவியமைக்கு பல காரணங்கள் அமையப்பெறுகின்றன. 1949 ஆம் ஆண்டு அல் இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தை நிறுவிய அதன் தலைவர் இமாம் ஹஸனுல் பன்னா படுகொலை செய்யப்பட்டதுடன், பல்லாயிரக்கணக்கான இஹ்வான்களும் சிறைப் படுத்தப்பட்டார்கள். மேலும், எகிப்தில் இஹ்வான்களின் பகிரங்க செயற்பாடுகள் முற்றாகத் தடைசெய்யப்பட்டன. பலஸ்தீனில் போராடிக் கொண்டிருந்த இஹ்வான்கள் எகிப்திற்கு திருப்பி அனுப்பப்பட்டார்கள். ஜோர்தான், யெமன், சூடான், எகிப்து, அல்ஜீரியா போன்ற நாடுகளிலிருந்தும் இஹ்வான்கள் பலஸ்தீனுக்குச் செல்வதற்கு தடை

## 1947இல் பலஸ்தீனின் நிலப்பரப்பு

### அன்று




## 2003இல் பலஸ்தீனின் நிலப்பரப்பு

### இன்று



விதிக்கப்பட்டது. அரபு உலகத்தில் குறிப்பாக பலஸ்தீனில் ஏற்பட்ட இந்த அரபுத் தேசியவாதத்தின் விளைவால் 1949 தொடக்கம் 1955 வரையான காலப் பகுதியில் 11 பிரிவினர்களாக பலஸ்தீனியர்கள் பிரிந்து போராட நேரிட்டது. இக்காலத்தில் பலஸ்தீனப் போராட்டம் தோல்வியடைந்தமைக்கு இதனையும் ஒரு பிரதான காரணமாகக் கொள்ளலாம்.

## மூன்றாவது கட்டம்
## பலஸ்தீனப் போராட்ட எழுச்சி (1967 - 1987)

பலஸ்தீனப் பிரச்சினையில் மிக முக்கியமான ஒரு காலப் பகுதியாக இக்காலப் பகுதி கருதப்படுகின்றது. அரபுத் தேசியவாதம் தோல்வி கண்டு பலஸ்தீனில் மீண்டும் ஒரு இஸ்லாமியப் போராட்ட எழுச்சி உருவெடுத்தது. இஸ்ரேலுக்கு எதிரான பலஸ்தீனர்களின் ஆயுதப் போராட்டம் தன்நம்பிக்கையுடன் உறுதியாகச் செயற்பட ஆரம்பித்தது. பலஸ்தீனுக்கு வெளியே உலகளாவிய ரீதியிலும் இஸ்லாமிய எழுச்சி பிரவாகித்தது. ஜோர்தான், எகிப்து, சூடான், அல்ஜீரியா, குவைத் டியூனிஸியா, யெமன் போன்ற அரபு நாடுகளிலும் ஈரான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், மலேசியா, இந்தோனேசியா போன்ற இஸ்லாமிய நாடுகளிலும் ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதிகளிலும் ஒரு பரவலான இஸ்லாமிய எழுச்சி அல்லது விழிப்புணர்ச்சி ஏற்பட்டதை அவதானிக்க முடிந்தது.

இஹ்வான்கள் பத்ஹை ஆரம்பித்து அதனூடாகப் போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் பல சிக்கல்கள் ஏற்பட்டதால், அதிலிருந்து பிரிந்த இஹ்வான்கள் மற்றொரு நடவடிக்கையாக "முஅஸ்கராதுஸ்ஸுயூப்" என்ற பெயரில் சில இராணுவ முகாம்களை நடாத்தினார்கள். இவர்களது முதலாவது முஅஸ்கர் 1968 ஆம் ஆண்டு ஆலூத் மாநிலத்தில் இடம்பெற்றது. இப்பயிற்சி முகாம்களில் இஹ்வான்களையும், பலஸ்தீன இளைஞர்களையும் போராட்டத்தில் பங்கேற்கச் செய்யும் வகையில் போர் நுணுக்கங்கள், தந்திரோபாயங்களை கற்றுக்கொடுத்தல், களப் பயிற்சிகளை வழங்குதல், போராட்டத்திற்கு அவர்களைத்

தயார்படுத்தல் என்பவற்றில் தான் அதிக கவனம் செலுத்தப்பட்டது. நாளாந்தம் இஸ்ரேலுக்கு எதிரான போராட்டத்தின் வேகம் அதிகரித்துச் சென்றது. இதனால் இஸ்ரேலிய அரசு மிகவும் பீதியடைந்தது. எனவே, இவர்களது ஒவ்வொரு இராணுவ முகாமும் இஸ்ரேலிய உளவு ஸ்தாபனங்களால் கூர்ந்து அவதானிக்கப்பட்டதுடன் பல முஅஸ்கர்கள் ஆக்கிரமிப்பாளர்களால், விமானப் படையினரின் உதவி கொண்டு தகர்க்கப்பட்டன. 1970 ஆம் ஆண்டு அஸ்கருஸ் ஸ*யூப் அமைப்புக்கும் தடை விதிக்கப்பட்டது.

இதனால் 1970 களின் பின்னர் இப்போராட்டம் வேறு வடிவில் விரிவடைந்தது. இஸ்லாமிய நலன்புரி அமைப்புக்கள், ஸகாத் சேகரிப்பு நிலையங்கள், சமூக சேவை ஒன்றியங்கள் என சர்வதேச ரீதியிலான பல இஸ்லாமிய நிறுவனங்களின் உதவிகள் பலஸ்தீனுக்கு கிடைத்தன. அத்துடன் பலஸ்தீனப் பல்கலைக் கழகங்களிலும் அரபு இஸ்லாமிய நாடுகளில் உள்ள பல்கலைக் கழங்களிலும் ஜிஹாத் சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு மாணவர்கள் போராட்ட ரீதியில் உணர்வூட்டப்பட்டார்கள். இக்காலப் பகுதியில் காஸா பள்ளத்தாக்கிலும் மேற்குக் கரையிலும் இப்போராட்டம் மேலும் வேகமடைந்தது. காஸா பள்ளத்தாக்கில் 'அல் மஜ்மஉல் இஸ்லாமி' என்ற அமைப்பின் செயற்பாடுகள் இதற்குப் பின்னணியாக இருந்தன. இதனை அஷ்ஷெய்க் அஹ்மது யாஸீன் அவர்கள் வழி நடாத்தினார்கள். ஆத்துடன் இக்காலப் பகுதியில் பல சமூக சேவைகளும், இளைஞர்களுக்கு மத்தியில் சிந்தனா ரீதியான ஒரு போராட்டமும் மேற்கொள்ளப்பட்டன. இதன் பயனாக காஸா பள்ளத்தாக்கில் 1967 - 1987 இற்கும் இடைப்பட்ட காலப் பகுதிகளில் சுமார் 400 பள்ளிகள் நிர்மாணிக்கப்பட்டதுடன் இவை ஒவ்வொன்றும் பலஸ்தீனப் போராட்ட சிந்தனையை வளர்க்கும் பிரதான நிறுவனங்களாகவும் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு முன்னேற்றப் படிகளைத் தாண்டி பலஸ்தீன விடுதலைப் போராட்டம் வளர்ந்து வருவதை சகிக்க முடியாத இஸ்ரேல் பல திட்டங்களைத் தீட்டி இதனை முறியடிக்க முனைந்தது. இதன் பிரதான சதித் திட்டமாக அஷ்ஷெய்க் அஹ்மது யாஸீன் அவர்களைக் கைது செய்து அவர் மீது பல போலிக் குற்றங்களைச் சுமத்தி அவருக்கு 13 வருட

சிறைத் தண்டனையை இஸ்ரேலிய நீதிமன்றம் வழங்கியது.

## நான்காவது கட்டம் :
## அல் இன்திபாழா அல் முபாரகா (1987 - இன்றுவரை)

பலஸ்தீனப் போராட்டத்தின் மிக முக்கியமானதொரு காலகட்டமாக இது கருதப்படுகின்றது. 1987 ஆம் ஆண்டு அக்டோபர் 6ம் திகதி இன்திபாழா முபாரகா ஆரம்பிக்கப்பட்டது. இதனை ஹரகதுல் ஜிஹாதில் இஸ்லாமி என்ற அமைப்பே முதன் முதலில் மேற்கொண்டது. இவ்வமைப்பை கலாநிதி பத்ஹி அஷ்-ஷகாபி, அஷ்-ஷெய்க் அப்துல் அஸீஸ் அவ்தா ஆகியோர் வழி நாடாத்தினார்கள். இதனது முதலாவது இன்திபாழா நடவடிக்கை ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதி நடாத்தப்பட்டது. இதன் போது இஸ்ரேலிய படையினருடன் ஏற்பட்ட மோதலில் 4 வீரர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். இந்த இன்திபாழா பல கட்டங்களாக இன்று வரை முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. முழுக்க முழுக்க ஈமானியப் பலத்தை மாத்திரம் பயன்படுத்தி மிகச் சாதாரணமான ஆயுதங்களால் போராடி வந்த இப்போராளிகள் ஆரம்பத்தில் தமது பிரதான ஆயுதமாகக் கற்களையே பயன்படுத்தி வந்தனர். காலப்போக்கில் இப்போராட்ட அலைகள் பல வடிவங்களாக விரிவடைந்தன. கணிசமான அளவு சிறுவர்களும் இப்போராட்டத்தில் பங்கேற்பது பலஸ்தீனப் போராட்டத்தின் கடமைப்பாட்டை மேலும் வலியுறுத்துவதாக அமைகின்றது. உண்மையில் முழு உலகையுமே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ள இந்த இன்திபாழா போராளிகளின் துணிச்சல், வீரம், தீரம் இஸ்ரேலியப் படையினருக்கு தமது கனரக ஆயுதங்களுக்கு முன்னால் ஒரு பெரும் சவாலாகவே இன்றுவரை இருந்து வருகின்றது.

## பலஸ்தீனப் போராட்டமும் ஹமாஸ் இயக்கமும்

பலஸ்தினப் போராட்ட எழுச்சியான இன்திபாழாவின் மற்றொரு வடிவமாகவே ஹமாஸ் இயக்கத்தகைத் குறிப்பிட வேண்டும். “ஹரகதுல் முகாவமதில் இஸ்லாமிய்யா” என்ற பெயரைக் கொண்ட

இந்த ஜிஹாத் இயக்கம் ஹமாஸ் எனச் சுருக்கமாக அழைக்கப்படுகிறது. இது அல் இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் பலஸ்தீன நடவடிக்கைகளுக்கான பிரதான பிரிவுகளுள் ஒன்றாக அமையப்பெறுகிறது.

ஆரம்பத்தில் மிக இரகசியமாக இவ்வியக்கம் இயங்கி வந்ததால் இது பற்றிய பல தகவல்கள் இன்னும் இரசியமாகவே இருக்கின்றன. எனினும் ஹமாஸ் 1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆந் திகதி ஓர் அறிக்கையை வெளியிட்டது. இஸ்லாத்தைத் தமது அடிப்படைக் கோட்பாடாகக் கொண்டு இயங்கும் இவ்வமைப்பு பலஸ்தீன விடுதலை, இஸ்லாமிய அரசை ஏற்படுத்தல், இழந்த உரிமைகளை மீளப் பெறல் போன்ற இலக்குகளை நோக்கி தாம் செயல்பட்டு வருவதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன் பின்னர் தான் ஹமாஸ் பகிரங்கமான நடவடிக்கைளிலும் இறங்கியது. இவ்வியக்கம் தமது முதல் கடமையாக தமது உறுப்பினர்களுக்கு முழுமையான "தர்பிய்யத்தை" வழங்குவதில் கூடிய கவனம் செலுத்தி வருகிறது. பெண்களும் விடுதலைப் போராட்டத்தில் பெரும் பங்கு வகிக்க வேண்டும் என்பதால் அவர்களையும் ஈடுபடுத்தும் பல திட்டங்களையும் வகுத்துச் செயல்படுத்தியும் வருகின்றது. இவ்வாறு இன்று வரை மிகக் கவனமாக தமது ஜிஹாதை ஹமாஸ் மேற்கொண்டு வருகிறது. உலகளாவிய ரீதியில் போராடும் வடுதலைப் போராட்டக் குழுக்களுள் மிக நுணுக்கமான ஓர் அமைப்பே இவ் இயக்கமாகும். இதனால் தான், இன்று வரை சற்றும் சளைக்காது மிகக் கடுமையான எதிர்ப்புகளுக்கும், கண்காணிப்புகளுக்கும் மத்தியிலும் ஹமாஸ் இயக்கம் போராடி, பலஸ்தீனத்தைப் பாதுகாத்து வருகின்றது. இங்ஙனம் இன்று பலஸ்தீனப் போராட்டத்தின் நாலாவது கட்டம் சிறப்புப் பெறுகிறது. சர்வதேச ரீதியில் திட்டங்கள் வகுக்கப்பட்டு அவை பலஸ்தீனில் பிரயோகிக்கப் படுகின்றமையையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது. குறிப்பாக, 21ஆம் நூற்றாண்டின் வல்லரசாக தன்னை சுயம் பேசிக் கொண்டிருக்கும் அமெரிக்கா, தனது ஆதரவை இஸ்ரேலுக்கு வழங்குகிறது. உலகின் எந்த நாட்டுக்கும் இல்லாததைப் போன்று தன் இனப்பெயரை நாட்டின் பெயராகச் சூட்டி, தான் ஓர் இனவாத சமூகம் என உலகுக்கு தன்னை

அறிமுகப்படுத்தியுள்ள இஸ்ரேல், 1917 ஆம் ஆண்டில் இருந்து ஓர் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையை பலஸ்தீனத்தில் மேற்கொண்டு சென்றாலும் மறுபக்கம் இஸ்ரேலிய இராட்சத வெறிக்கு பலஸ்தீனர்களின் உயிர்கள் தினமும் பலியாவது தான் வேதனை மேல் வேதனையாக இருக்கின்றது. பல சமாதான முன்னெடுப்புக்கள் இடையிடையே மேற்கொள்ளப்பட்ட போதும் இன்று வரை எந்தவொரு இறுதித் தீர்வையும் அடையப் பெறாத நிலையில் போராட்டம் தொடர்கிறது.

## பலஸ்தீனின் கடந்த 2000 வருட காலத்தின் முக்கிய வரலாற்று நிகழ்வுகள் :

**கி.பி 70 :**

உரோம ஆட்சிக்கெதிராக யூதர்கள் புரட்சி செய்கிறார்கள். உரோமச் சக்கரவர்த்தி டைடஸ் அவர்களை அடக்கி நாட்டை விட்டும் துரத்திவிடுகின்றார். யூதர்களின் நீண்ட கால (2000 ஆண்டுகள்) வெளியேற்றம் (DIASPORA) இதிலிருந்து ஆரம்பிக்கிறது.

**கி.பி. 118 - 138 :**

யூதர்கள் மீள வருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். கி.பி.133ல் மீண்டும் புரட்சி செய்கிறார்கள். இதனால் பலஸ்தீன் நகரம் முற்றிலுமாக அழிக்கப்படுகிறது. யூதர்கள் விரட்டப்பட்டதோடு அடிமைகளாவும் விற்கப்படுகின்றனர்.

**கி.பி. 638 :**

அரபு முஸ்லிம்கள் பலஸ்தீனத்தைக் கைப்பற்றுகிறார்கள். கலீபா உமர் நேரடியாக வந்து ஜெரூஸலத்தின் திறவுகோலைக் கையேற்கிறார். இடையில் (1099 முதல் 1187 வரை) சிலுவை யுத்த வீரர்களின் ஆட்சிக்கு ஜெரூஸலம் உட்படுத்தப்பட்டது தவிர்ந்த ஏனைய காலங்களில், உதுமானிய சாம்ராஜ்யம் (இறுதி கிலாபத்) முடிவுக்கு வரும்வரை (1924) பலஸ்தீனம் முஸ்லிம்களின் பூமியாகவே இருந்து வந்தது.

## கி.பி. 1896 :

ஐரோப்பிய நாடுகளில் யூத இனத்துக்கெதிரான நடவடிக்கைகளின் விளைவை முன்னிறுத்தி, எழுத்தாளன் தியோடர் பேர்ஸல் என்பவரால் யூதர்களுக்கான ஒரு பூமி தேவை என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. இதன் பிரகாரம் சுவிட்சலாந்தில் யூதத் தலைவர்களும், தனவந்தர்களும், அறிஞர்களும் ஒன்று கூடி முதலாவது ஸியோனிச காங்கிரஸ் மாநாட்டைக் கூட்டி பலஸ்தீனில் யூதர்களின் தாயகம் அமைப்பது பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

## கி.பி. 1903 :

கி.பி.1903 வரையிலான காலப் பகுதிக்குள் 25,000 யூதர்கள் பலஸ்தீனில் படிப்படியாகக் குடியேறினர்.

## கி.பி. 1914 :

கி.பி. 1914 ல் மட்டும் மேலும் 10,000 யூதர்கள் குடியேறினார்கள்.

## கி.பி. 1916 :

சைக்ஸ் - பிகொட் (**Sykes – Picot**) இரகசிய உடன்படிக்கை, பிரித்தானியாவுக்கும் பிரான்சுக்கும் இடையில் ரஷ்யாவின் சம்மதத்துடன் சைக்ஸ் - பிகொட் (Sykes – Picot) இரகசிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இது உதுமானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்த சிரியா, ஈராக், லெபனான், பலஸ்தீன் ஆகிய அரபுப் பிராந்தியங்களை எவ்வாறு தமக்குள் கூறுபோடுவது என்பது பற்றியதே.

இதே கால கட்டத்தில் எகிப்திலிருந்த பிரித்தானிய கமிஷனர் ஹென்றி மக்மகோன் உதுமானிய ஆட்சியின் கீழிருந்த அரபு மாகாணங்களுக்கு சுதந்திரம் வழங்குவதாக பொய் வாக்குறுதியளித்தார்.

## கி.பி. 1917 :

### பேல்போர் (Balfour) பிரகடனம்.

1917 ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ந் திகதி ஆர்தர் ஜேம்ஸ் பெல்போர் பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர், பிரித்தானிய யூத சமூகத் தலைவரான லோட் ரோத் சைல்டுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றின் மூலம் யூத தேசிய தாயகம் பற்றிய உறுதி மொழியை வழங்கினார். அவை பின்வருமாறு அமையப்பெறுகிறது.

*"பலஸ்தீனில் யூத மக்களுக்காக ஒரு தேசிய தாயகத்தை அமைப்பதை மேன்மை தங்கிய அரசரின் அரசாங்கம் சாதகமாக நோக்குகிறது. இந்த நோக்கை அடைந்து கொள்ள உதவுவதற்கு தம்மாலான அனைத்து முயற்சிகளையும் பயன்படுத்தும் அதேவேளை பலஸ்தீனில் வாழும் யூதரல்லாத சமூகங்களின் குடியுரிமை, மத உரிமைகளை பாதிக்கக் கூடிய அல்லது ஏனைய நாடுகளில் யூதர்கள் அனுபவிக்கும் உரிமைகள், அரசியல் அந்தஸ்துக்களைப் பாதிக்கக் கூடிய எதனையும் மேற்கொள்ளக் கூடாது என்ற புரிந்துணர்வையும் முன்வைக்கிறது."*

## கி.பி. 1922 :

தொடர்ந்து இடம் பெற்ற குடியேற்றங்களால் கி.பி. 1922 ல் பலஸ்தீன நாட்டின் மொத்த சனத்தொகையில் 11% மானோர் யூதர்களாயினர்.

## கி.பி. 1929 :

கி.பி. 1929 ல் அரபியர்களுக்கும் யூதர்களுக்குமிடையே போராட்டம் துவங்குகிறது. 133 யூதர்கள் அரபியர்களின் தாக்குதல்களுக்கு உள்ளானார்கள். அதேவேளை பிரித்தானிய பொலிஸ் படை 110 பலஸ்தீனர்களைக் கொன்றது.

## கி.பி. 1930 :

இரண்டாம் உலக யுத்த காலப்பகுதியில் ஐரோப்பாவில் நாஸிகளால் யூதர்களுக்கு எதிராக துன்புறுத்தல்கள் ஆரம்பிக்கப்பட்டதால் அவர்கள் பலஸ்தீனுக்கு பாரிய அளவில் குடியேற்றப்பட்டனர்.

இதனால் இத்திட்டமிட்ட குடியேற்றத்துக்கு எதிராக பலஸ்தீனர்கள் போர்க்கொடி தூக்க ஆரம்பித்தனர்.

### கி.பி. 1936 :

பலஸ்தீனர்கள் பொது வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொண்டனர். இதே காலத்தில் யூதர்களின் பயங்கரவாத இயக்கமான இர்கன் (Irgun) தோற்றம் பெற்றது. இது பலஸ்தீன், பிரித்தானிய இலக்குகளைக் குறிவைப்பதற்கு வழிவகுத்தது.

### கி.பி. 1937 :

'லோட் பீல்' தலைமையில் பிரித்தானிய இராஜ ஆணைக்குழு பலஸ்தீனின் 1/3 பகுதியை யூத நாடாகவும் மிகுதியை அரபு நாடாகவும் பிரிக்கப் பிரேரித்தது. பலஸ்தீனர்களோ யூத குடியேற்றங்களை நிறுத்தும்படியும் பலஸ்தீன் ஒரே நாடாக இருக்க வேண்டுமெனவும் சிறுபான்மை சமூகத்தினரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் எனவும் கூறி, பிரிவினையை எதிர்த்துப் புரட்சி செய்தார்கள். இறுதியில் பிரித்தானியப் படைகளால் அப்புரட்சி அடக்கப்பட்டது.

### கி.பி. 1947 :

பலஸ்தீனின் நிர்வாகப் பொறுப்பை பிரித்தானியா விட்டுச் செல்ல ஆயத்தமாக, பிரச்சினையை ஐ.நா. சபைக்கு கொண்டு சென்றனர். பலஸ்தீன் ஐ.நா.வின் மேற்பார்வைக்குள் கொண்டுவரப்பட்டது. ஐ.நா. பலஸ்தீனை இருகூறாக்கும் ஆலோசனையை முன்வைத்தது. அதன்படி 43.53% நிலப்பரப்பு பலஸ்தீனர்களுக்கும், 56.47% நிலப்பரப்பு யூதர்களுக்கும் செல்வதனால் பலஸ்தீனர்கள் அதனை ஏற்க மறுத்தனர். யூதர்கள் அதனை ஆதரித்தனர். (படத்தில் ஐ.நா. வின் பிரிப்புத் திட்டம் காட்டப்பட்டுள்ளது).

### கி.பி. 1948 :

இதனை அடுத்து 15.5.1948ல் இஸ்ரேல் நாடு பிரகடனப்படுத்தப்பட்டது. எகிப்து, சிரியா, லெபனான் ஆகிய அயல் அரபு நாடுகள்

அதற்கெதிராகப் படையெடுப்பு நடத்தி தோல்வி கண்டன. இஸ்ரேல் ஐ.நா. வழங்கவிருந்த எல்லைகளை விட அதிகமாக ஆக்கிரமித்துக் கொண்டது. ஐ.நா. வின் திட்டத்துக்கு அதிகமாக இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பகுதிகளை படம் விளக்குகிறது.

## கி.பி. 1956 :

கமால் அப்துல் நாசர் எகிப்தின் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றவுடன் சிரிய இராணுவத்துடன் தமது இராணுவத்தை இணைத்ததுடன் சுயஸ் கால்வாயைத் தேசியமயமாக்கினார். இதனை எதிர்த்து இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் இஸ்ரேலும் இணைந்து 29.10.1956ல் சினாய் தீபகற்பத்தினுள் பிரவேசித்தன. சர்வதேச அழுத்தம் காரணமாக இஸ்ரேல் சினாய் பாலைவனத்தைக் கைவிட்டது. அத்துடன் இங்கிலாந்து, பிரான்ஸ் நாட்டுப் படைகளும் திருப்பி அழைக்கப்பட்டன. (சினாய் தீபகற்பம் உட்பட இஸ்ரேல் கைப்பற்றிய பகுதிகளை படம் விளக்குகிறது).

## கி.பி. 1964 :

பலஸ்தீன் விடுதலை இயக்கம் (PLO) தோற்றுவிக்கப்பட்டது. இஸ்ரேலை அழித்து தமது மண்ணினை மீட்கப் போவதாகவும், தாமே பலஸ்தீனர்களின் ஏகப் பிரதிநிதி எனவும் யாசிர் அரபாத் கூறி அதற்கான பொறுப்பினை முன்னெடுத்தார்.

## கி.பி. 1967 :

அயல் அரபு நாடுகள் இஸ்ரேல் மீது போர்தொடுத்தன. யுத்தம் ஆறு நாட்கள் நடைபெற்றது. இதில் இஸ்ரேல் எகிப்தின் சினாய்ப் பாலைவனத்தையும் மற்றும் ஜெருசலம் பழைய நகரையும் கைப்பற்றிக் கொண்டது. 1967க்கு முந்திய எல்லைப் பகுதிகளுக்கு இஸ்ரேல் திரும்ப வேண்டுமென ஐ.நா. தீர்மானம் நிறைவேற்றியது.

## கி.பி. 1973 :

யூதர்களின் பெருநாளான 'யோன் கிப்பு' அன்று ( ஒக்டோபர் 6) சிரியாவும், எகிப்தும் இஸ்ரேலுக்கெதிராக மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பித்தன. இத்திடீர் தாக்குதலின்போது எகிப்து, 1967ல் (ஆறு

நாள் யுத்தத்தில்) தான் இழந்த பெரும் பகுதியை மீளக் கைப்பற்றிக் கொண்டது.

### கி.பி. 1979 :

### கேம்ப் டேவிட் உடன்படிக்கை

அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி காட்டர் முன்னிலையில், எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாதுக்கும், இஸ்ரவேல் பிரதமர் மெனாசெம் பெகினுக்குமிடையில் ஓர் உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது. இதன்மூலம் எகிப்து இஸ்ரேலின் இருப்பை அங்கீகரித்தது. இழந்த சினாய் பாலைவனத்தை மீண்டும் பெற்றுக் கொண்டது.

### கி.பி. 1982 :

லெபனானிலிருந்த ஐ.நா. அகதிமுகாம்களான ஷப்றா, சதில்லா ஆகியவற்றுள் யூத இராணுவம், தற்போதைய பிரதமரான ஏரியல் ஷெரோனின் தலைமையில் புகுந்து நாசகார வேலைகளில் ஈடுபட்டு அகதிகளைக் கொன்று குவித்தது.

### கி.பி. 1987 :

யூத குடியேற்றங்கள் மேற்குக் கரையில் தொடர்ந்த நிலையில், PLO வும் பலமிழந்து பல நாடுகளிலிருந்தும் விரட்டப்பட்ட நிலையில், லெபனானில் அகதிமுகாம்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்ட அதிர்ச்சியில், பலஸ்தீன முஸ்லிம்கள் தமது மக்கள் போரட்டமான 'இன்திபாழா I' யை பலஸ்தீனுக்குள் ஆரம்பித்தனர்.

### கி.பி. 1993 :

### 1993 ஒஸ்லோ பிரகடனம். :

அமெரிக்க வெள்ளை மாளிகையில் வைத்து பெரும் ஆரவாரத்துடன் இஸ்ரேலுக்கும் PLO க்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட பிரகடனம் ஒரு நிரந்தர உடன்படிக்கையாக இறுதிவரை அங்கீகரிக்கப்படவில்லை. இதன் அடிப்படையில் சில நிகழ்வுகள் இடம்பெற்றன.

1. பலஸ்தீனர்களுக்கும் சில பகுதி நிலமேற்பரப்புக்கள், மேற்குக் கரை காஸாப் பகுதி என்பன கையளிக்கப்பட்டன.

2. பலஸ்தீன தேசிய அதிகாரசபை PNA அமைக்கப்பட்டு யாஸிர் அரபாத் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார்.
3. பலஸ்தீன பொலிஸ்படை உருவாக்கப்பட்டு, ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் வீரர்கள் நசுக்கப்பட்டனர்.

அடையப் பெறாதவை :

1. ஜெருசலத்தின் அந்தஸ்து பற்றி எவ்வித முடிவுமில்லை.
2. அகதிகளின் நிலைபற்றி முடிவில்லை.
3. பலஸ்தீனின் எல்லைகள் பற்றி எவ்வித முடிவுமில்லை.

## கி.பி. 2000 :

2000ம் ஆண்டு செப்டம்பரில் இரண்டாவது இன்திபாழா (மக்கள் போராட்டம்) ஆரம்பிக்கப்பட்டது. இதனால், ஒஸ்லோ பிரகடனம் இயற்கை மரணம் எய்தியதாகவே கருதப்படுகின்றது.

## கி.பி. 2002 :

2002ல் ஏரியல் ஷெரோன், இஸ்ரேலியப் பிரதமராகப் பதவியேற்றார். இதனைத் தொடர்ந்து ஜெனின் அகதி முகாம்களில் பலவித வதைகள் ஆரம்பித்தன.

## கி.பி. 2003 :

பலஸ்தீனின முதலாவது பிரதமராகும் அப்பாஸுக்கு பாராளுமன்றம் (01.04.2003) அங்கீகாரம். 2005 ஆம் ஆண்டுக்குள் பலஸ்தீன அரசை உருவாக்குவதற்கான சர்வதேச திட்டத்தை வெளியிடுவதற்கு அப்பாஸ் மற்றும் அவரது அமைச்சரவையை பலஸ்தீன பாராளுமன்றம் அங்கீகரிக்க வேண்டுமென வாஷிங்டன் கூறியுள்ளது.

## கி.பி 2003:

பஸ்தீனப் பிரதமர் அப்பாஸ் 07.09.2003 இல் இராஜினாமா. சமாதான நம்பிக்கைகள் சிதறடிப்பு.

## கி.பி 2003

பலஸ்தீன மேற்குக்கரைப் பகுதியை ஊடறுத்து இஸ்ரேல் சர்ச்சைக்குரிய பாதுகாப்பு மதிலை நிர்மாணித்து வருவதைக்

கண்டிக்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபை பிரேரணை மீது அமெரிக்கா 15.10.2003 அன்று "வீட்டோ" பிரயோகம் செய்தது. இஸ்ரேலை கண்டிக்கும் தீர்மானத்துக்கு எதிராக இருமாத காலத்தில் இரண்டாவது முறையாக அமெரிக்கா வீட்டோ பிரயோகம் செய்துள்ளது.

## பலஸ்தீன் சனத்தொகைக் கட்டமைப்பில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள்.

பலஸ்தீனம், அரசியல் ரீதியில் பல போராட்டங்களையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்குவதைப் போன்று திட்டமிட்ட யூதர்களின் குடியேற்றங்களினாலும் இனரீதியான பாதிப்புகளுக்குட்படுகின்றது. குறிப்பாக 1882 ஆம் ஆண்டு பலஸ்தினை நோக்கி யூதர்கள் இடம்பெயர ஆரம்பித்தனர். ரஷ்யத் தலைவர் இரண்டாவது ஸ்கந்தலன் படுகொலையுடன் ஒரு யூதப் பெண்ணுக்குத் தொடர்பு இருந்ததன் காரணமாக யூதர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். இதனால் ரஷ்யாவிலிருந்து பலஸ்தீனை நோக்கி யூதர்கள் ஆரம்பத்தில் இடம்பெயர ஆரம்பித்தனர். இதனைத்தூண்டுவதற்காக ''ஸியோனிச நேசர்கள்" என்ற அமைப்பும் உருவாக்கப்பட்டது. 1897 ஆம் ஆண்டு சுவிற்சர்லாந்தின் 'போல்' நகரில் முதலாவது சியோனிஸ மாநாடு நடைபெற்றது. இதிலிருந்து பலஸ்தீனை நோக்கிய இடப் பெயர்வைத் தூண்டுவதற்காக போல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் பலஸ்தினீல் யூதர்களின் சனத்தொகை வீதம் அதிகரிக்கத் தொடங்கியது. அத்துடன் தாம் அங்கீகாரம் பெற்ற ஒரு சமூகமாகத் திகழவேண்டும் எனவும் எதிர்பார்த்தனர். உண்மையில் யூதர்கள் பலஸ்தீனை நோக்கி இடம்பெயர்ந்தமையும், பலஸ்தீன் மக்களை அங்கிருந்து நிர்ப்பந்தமாக வெளியேற்றியமையும் யூதர்களுக்குச் சாதகமாக சனத்தொகை சமநிலையில பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதேவேளை பலஸ்தீனில் தொடர்ந்திருந்தோரின் இயல்பான சனத்தொகை வளர்ச்சி வீதம் யூதர்களின் சனத்தொகை வளர்ச்சி வீதத்தை விடவும் அதிகமாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

1917 ஆம் ஆண்டு பலஸ்தீனர்களின் சனத்தொகை 92 வீதமாக இருக்க யூதர்கள் 8 வீதமாகவே இருந்தனர். இதன் மூலம் நிலத்தின் உண்மையான உரிமையாளர்களான பலஸ்தீன மக்களின் தொகையுடன் ஒப்பிடுகையில் யூதர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகக் காணப்பட்டது.

இவ்வருடத்திற்கு முன்னர் பிரித்தானியாவுக்கும் பிரான்ஸுக்குமிடையில் பலஸ்தீனைக் கூறு போடுவதற்கான "ஸீக்ஸ்பேகோ" உடன்படிக்கை கைச்சாத்தானது. இதன் அடிப்படையில் பலஸ்தீனில் யூத இனத்தை நிலை கொள்ளச் செய்வதற்காக பலஸ்தீனமானது சர்வதேச நிர்வாகத்தின் கீழ் 1916. நவம்பர். 02 ல் கொண்டு வரப்பட்டது. மேலும், அதே வருடம் 'பெல்போர்' உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டது. பின்னர் யூத இடப்பெயர்வைத் தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் பிரித்தானிய ஆக்கிரமிப்பும் தொடர்ந்தது. பலஸ்தீனர்களில் பாரியளவு தொகையை வெளியேற்றுவெதற்கென்றே சில ஸியோனிசத் தீவிரவாத அமைப்புகளும் தோற்றுவிக்கப்பட்டன.

1948 ஆம் ஆண்டு சியோனிஸ அரசு உருவாக்கப்பட்ட போது பலஸ்தீனின் சனத்தொகை 20065 மில்லியன் ஆகும். இதில் பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 1.415 மில்லியன் (68.5%) ஆகும். யூதர்களின் எண்ணிக்கை 650,000 (31.5மூ) ஆக அமையப்பெற்றது. சனத்தொகை சமநிலையில் அவதானிக்கப்பட்ட இம்மாற்றமானது ஜேர்மனிலிருந்தும், ஹிட்லர் 1933 ஆம் ஆண்டு ஜேர்மனியைக் கைப்பற்றியதன் பின்னர் நாசிஸ நாடுகளிலிருந்தும் யூதர்கள் பெருமளவு குடிபெயர்ந்ததனால் ஏற்பட்டதாகும். இதே காலப் பிரிவில் பிரித்தானியாவும் இடப்பெயர்வைத் தூண்டிக் கொண்டிருந்தது. இத்தகைய குடியேற்றங்களானது உத்தியோகபூர்வ அங்கீரத்தைப் பெற்றன. பிரித்தானிய ஆக்கிரமிப்புக் காலத்தில் பலஸ்தீனை நோக்கி இடம்பெயர்ந்த யூதர்களின் எண்ணிக்கை 483000 ஆக உயர்ந்தது. அதாவது 1917 ஆம் ஆண்டு பலஸ்தீனை யூதர்கள் ஆக்கிரமிக்க முன்னர் பலஸ்தீனிலிருந்த யூதர்களது சனத்தொகையை விட இது எட்டு மடங்காகும்.

EASTERN UNIVERSITY LIBRARY


1949 ஆம் ஆண்டு யூதர்களது சனத்தொகையில் சாதகமானதொரு மாற்றமேற்பட்டது. சியோனிஸ அரசனி உருவாக்கமும் பலஸ்தீனிலிருந்து பிரித்தானியப் படையின் பின்வாங்கலும் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மிகப்பெரும் யூதக் குடிப்பெயர்வு இடம்பெற்றமையை அவதானிக்க முடிகிறது.

1948 – 1951 ஆம் ஆண்டுகளில் சுமார் 40 நாடுகளிலிருந்து 686.748 யூதர்கள் இடம் பெயர்ந்தனர். அதேவேளை பல்லாயிரம் பலஸ்தீனர்கள் வெளியேற்றப்பட்டனர். மேலும் பெரும்பாலான அறபு நகரங்கள், கிராமங்கள் அங்கு வாழ்ந்து வந்த பூர்வீக முஸ்லிம்களிடமிருந்தும் பலாத்காரமான வழிகளில் பறிபோயின. இப்பகுதிகளில் யூதர்கள் குடியமர்த்தப்பட்டனர். யூதர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் 160.000 பலஸ்தீனர்களே எஞ்சியிருந்தனர.


**பலஸ்தீனில் ஏற்ப்பட்ட இனரீதியான குடித்தொகை மாற்றங்கள். (1917 - 2000)**

| ஆண்டு | மொத்த குடித்தொகை | பலஸ்தீனில் வாழும் பலஸ்தீனர்கள் | | பலஸ்தீனில் உள்ள யூதர்கள் | |
|---|---|---|---|---|---|
| | | தொகை | வீதம் | தொகை | வீதம் |
| 1917 | 700 000 | 644 000 | 92.0% | 56 000 | 8.0% |
| 1932 | 993 690 | 881 690 | 88.7% | 112 00 | 11.3% |
| 1948 | 206 500 | 1415 000 | 68.5% | 250 000 | 31.5% |
| 1961 | 3403 479 | 1481 779 | 41.8% | 1981 700 | 58.2% |
| 1969 | 3877 700 | 1387 700 | 35.8% | 2490 000 | 64.2% |
| 1980 | 510 200 | 1819 000 | 35.7% | 3283 000 | 64.3% |
| 1985 | 560 800 | 2091 000 | 37.3% | 3517 000 | 62.7% |
| 1988 | 5960 000 | 2301 000 | 38.7% | 6659 000 | 61.3% |
| 1990 | 6523 000 | 2597 000 | 39.9% | 3926 000 | 60.2% |
| 1994 | 7244 300 | 2789 000 | 38.5% | 4455 000 | 61.5% |
| 2000 | 8000 000 | 3700 000 | 46.25% | 4300 00 | 53.75% |


**பலஸ்தீனின் 1900-2000 ஆண்டு காலப்பகுதிக்கான இனரீதியான குடிப்பரம்பல் மாற்றம்**




**1917**





**1932**




**1948**


**1961**





பலஸ்தீனில் வாழும் யூதர்கள்

பலஸ்தீனில் வாழும் பலஸ்தீனியர்


**பலஸ்தீனின் 1900-2000 ஆண்டு காலப்பகுதிக்கான இனரீதியான குடிப்பரம்பல் மாற்றம்**





1969




1980




1990




2000

- பலஸ்தீனில் வாழும் யூதர்கள்
- பலஸ்தீனில் வாழும் பலஸ்தீனியர்

**1917 - ஆம் ஆண்டு காலத்தினது இனரீதியான சனத்தொகைப் பரம்பல்.**

**(பிரித்தானிய ஆக்கிரமிப்புக்கு முந்திய காலப் பகுதி ):**
*1917ம் ஆண்டில், பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 644000 (92%)* ஆக இருந்த போது 56000 (8%) யூதர்கள் வாழ்ந்தார்கள். அவ்வேளை, யூதர்கள் பலஸ்தீன பூமியில் 21% பரப்பையே தம் வசம் வைத்திருந்தனர். யூதர்களின் பலஸ்தீனை நோக்கிய முதலாவது இடப்பெயர்வு 1882 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. 1903 ஆம் ஆண்டுவரை இடம் பெயர்ந்த யூதர்களின் எண்ணிக்கை சுமார் 20 ஆயிரமாகும்.

1917 இல் பலஸ்தீனைப் பிரித்தானியா ஆக்கிரமித்ததன் பின்னர் 1917.11.02 இல் கைச்சாத்தான பெல்போல் உடன்படிக்கை பலஸ்தீனில் யூதர்களுக்கு தனிநாடு அமைத்துத் தருவதாக வாக்குறுதியளித்தது.

**1917 - 1948 ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட கால சனத்தொகை மாற்றம்.**

1947.11.24 இல் ஐ.நா. சபை பலஸ்தீனை இரு தேசங்களாகப் பிரிப்பதற்கான தீர்மானத்தை வெளியிட்டது. இதில் யூதர்களுக்கு 54% நிலங்கள் வழங்கப்பட்டன. 1948 ஆம் ஆண்டைய யுத்தத்தின் போது பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 2.65 மில்லியனாகவும் (69%) யூதர்களின் எண்ணிக்கை 2.065 மில்லியனாகவும் 650000 (31%) ஆகவும் இருந்தது. பிரித்தானிய ஆக்கிரமிப்புப் படைகளின் அழைப்பின் மூலம் யூதர்களின் தொகை அதிகரிப்பு ஏற்பட்டது. சொத்துடைமை சம்பந்தமான உடன்படிக்கைக்கு ஏற்ப யூதர்கள் 5.66% பலஸ்தீன நிலத்தைச் சொந்தமாக்கலாம். எனினும், அவர்கள் தங்களது முழுப் பலத்தையும் பிரயோகித்து உடன்படிக்கைக்கு மேலாக 11% நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டனர். இதில் 191 கிராமங்களும் 8 நகரங்களும் அடங்கும். மேலும், இவர்கள் 1948 ஆம் ஆண்டு அகதிகளில் அரைவாசிப் பேரை அந்நிலங்களிலிருந்து விரட்டியடித்தனர்.

**1948 ஆம் ஆண்டு யுத்தத்தின் பின்னர்**

1948.05.15 இல் பலஸ்தீனப் பூமியில் இஸ்ரேல் அரசின் தோற்றத்தை சியோனிஸ்டுகள் அறிவித்தனர். பின்னர், சியோனிஸப் படைக்கும் பலஸ்தீன் அறபுப் படைக்கும் இடையில் யுத்தம் நடைபெற்றது. பலஸ்தீன அறபுப் படைகள் தயார் நிலையில் இல்லாததன் காரணமாக அவர்கள் தோல்வியடைந்தார்கள். இதன் விளைவாக சியோனிஸ்டுகள் பலஸ்தீன பூமியில் 77.4% மான பகுதிகளை ஆக்கிரமித்தனர். சியோனிஸ அரசின் நோக்கமே அதுதான். பலஸ்தீனர்களைக் கொன்று குவித்து பெரும் இரத்த வெள்ளத்தை ஏற்படுத்தினர். இதனால், 1948 ஆம் ஆண்டில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான யூதர்களுக்குப் பகரமாக 160000 பலஸ்தீனர்களே ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் வாழ முடிந்தது. சியோனிஸ அரசு தோற்றம் பெற்ற ஆறு மாதங்களில் பலஸ்தீனை நோக்கி 101828 யூதர்கள் இடம்பெயர்ந்தனர்.

**1967 ஆம் ஆண்டு யுத்தத்தின் பின்னர்**

1967 ஜுனில் இடம் பெற்ற யுத்தத்தால் பலஸ்தீனில் எஞ்சியிருந்த பூமியுடன் எகிப்தின் சினாய்ப் பலைவனமும் சிரியாவின் கோலான் குன்றுகளும் யூதர்களால் ஆக்கிரமிக்கப்பட்டன. இதன் மூலம் 89359 சதுர கிலோமீற்றர் அறபுப் பூர்வீக நிலங்கள் சியோனிஸ ஆக்கிரமிப்புக்குட்பட்டது. இது யுத்தத்திற்கு முன்னர் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தைவிட நான்கு மடங்கு அதிகமாகும். யுத்த வேளையில் பலஸ்தீனில் குடியிருந்த முஸ்லீம்களின் எண்ணிக்கை 2.25 மில்லியனாகும்.. இது பலஸ்தீன் சனத்தொகையில் 70% ஆகவிருந்தது. அதேவேளை யூதர்களின் எண்ணிக்கை 30% மாகவே இருந்தது. இங்கு தொடர்ந்து இடம் பெற்ற போராட்டங்களினாலும், சியோனிஸ கொலை முயற்சிகளின் காரணமாகவும், அச்சுறுத்தலினாலும் சுமார் 410000 பலஸ்தீனர்கள் இக்காலப் பகுதிகளில் தமது நாட்டை விட்டும் தப்பியோடினர்.

1967.11.25 இல் மேற்குக் கரையோரப் பகுதிகளிலும், காஸாப் பள்ளத்தாக்கிலும் சியோனிஸ்டுகளின் முதலாவது குடியேற்றத் திட்டம் ஆரம்பமானது. ஆக்கிரமிப்பின் முதல் வருடத்திலேயே 14 குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்பட்டன. 12270 யூதர்கள் இப்பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து வந்தனர்.

**லெபனான் யுத்த காலத்தில்**

1982 மே இல் நட்புரீதியான சமாதானத் திட்டம் என்ற போர்வையில் சியோனிஸ்டுகள் லெபனானைத் தாக்கினர். லேபனானின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள வட பலஸ்தீனில் அமைக்கப்பட்ட சியோனிஸ நகரங்களையும் 63 இல் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களையும் பாதுகாப்பதே இவ்யுத்தத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது. இதற்காக லெபானனின் தெற்குப் பகுதியிலேயே பாரிய ஏவுகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. பின்னர், பலஸ்தீனின் எதிர்ப்பின் மூலம் இது முடிவுக்கு வந்தது. 1985 இல் லெபனானில் இருந்து சியோனிஸ்டுகள் பின்வாங்கினர். அதேபோன்று 1982 இல் நடந்த ஒப்பந்தத்தின்படி சினாய்ப் பாலைவனத்திலிருந்தும் பின்வாங்கினர்.

**காஸா ஜெரிகோ ஒப்பந்தத்தின் பின்னர்**

1993 செப்டம்பரில் ஒஸ்லோ உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இதன் படி காஸா, ஜெரிகோ ஆகிய இரு பகுதிகளுக்கும் சுயாட்சி வழங்கப்பட்டது. இவ்விரு பிரதேசங்களும் பலஸ்தீனத்தில் 15% தைக் கொண்டது. காஸாவின் பரப்பு 363 சதுர கிலோ மீற்றராகும். இங்கு வாழும் 8 இலட்சம் மக்களில் 5 இலட்சம் பேர் குடியேற்றப்பட்ட யூதர்களாகும். ஜெரிகோவின் பரப்பு 60 சதுர கிலோ மீற்றராகும். இதுவும் இதனை அண்டிய பிரதேசங்களும் 25 ஆயிரம் சனத்தொகையைக் கொண்டது. ஒஸ்லோ உடன்படிக்கைக்குச் சற்று முன்னர் இஸ்ரேல் மேற்குக் கரையில் 65% நிலத்தை ஆக்கிரமித்திருந்தது. எனினும் ஒஸ்லோவுக்குப் பின்னர் 73% நிலத்தை சியோனிஸ்டுகள் சூறையாடிக்கொண்டனர். இதனால் 67 ஆயிரம் ஏக்கர் நிலம் உடன்படிக்கையின் பின்னர் அவர்களுக்கு உரிமையானது. தற்போது பலஸ்தீனில் 7.2 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இவர்களுள் 4.4 மில்லியன் யூதர்களும் 2.2 மில்லியன் பலஸ்தீனியர்களும் அடங்குவர்.

சுவிற்ஸர்லாந்தில் பேர்ஸல் நகரில் 1897 ஆம் ஆண்டு ஸியோனிஸ்ட்களின் முதலாவது மாநாடு தியேட்டர் ஹேர்ஸஸ் என்பவனின் தலைமையில் ஒன்று கூடியது. உலகின் பல பாகங்களிலிருந்தும் யூத தலைவர்கள் இதில் கலந்து கொண்டார்கள். இதில் பலஸ்தீனில் ஒரு ஸியோனிஸ ராஜ்யத்தை உருவாக்குதல்

என்பது பற்றி, ஸியோனிஸ இயக்கத்தின் இஸ்தாபகரான ஹேர்ட்ஸலின் சிந்தனை முன்வைக்கப்பட்டது. நைல் நதி முதல் யூபிரடிஸ் கரையோரம் வரையான ஒரு பெரும் ஸியோனிஸ ராஜ்யத்தை உருவாக்குவதற்கான முதற்கட்டமாக பலஸ்தீனை நோக்கி யூதர்களை இடம்பெயரத் தூண்டவேண்டும் என்ற தீர்மானமும் இதில் எடுக்கப்பட்டது. இம்முடிவானது யூதர்களின் வேத நூலான தௌராத்தின் கட்டளைப்படி எடுக்கப்பட்டது எனக் கூறப்பட்டது. அல்லாஹ் ஏப்ரேமுக்கு திடமான வாக்குறுதியை வழங்கிய அத்தினத்தில், "நாம் உமக்கு மிஸ்ரிலிருந்த மிகப் பெரிய நதியான யூப்ரடிஸ் நதி வரை இந்தப் பூமியை வழங்குவோம்" எனக் கூறினான் என தௌராத்தில் வருவதாக யூதர்கள் குறிப்பிடுகின்றார்கள். யூதர்களின் வேதம் இந்தப் பூமியைத்தான் இஸ்ரேல் என்று சொல்வதாகவும் நம்புகிறார்கள். இது ஆசியாவின் தென்மேற்குப் பகுதியையும் பலஸ்தீன், லெபனான், ஜோர்தான் ஆகிய நாடுகளின் சில பகுதிகளையும் உள்ளடக்கியதாகும். இவை அனைத்தையும் உள்ளடக்கிய இந்தப் பெரிய இஸ்ரேலின் வரைபடம் இன்றும் இஸ்ரேலியப் பாராளுமன்றக் கட்டடத்தில் தொங்கவிடப்பட்டுள்ளது. இத்தகைய செய்முறைகள் எதுவும் பலஸ்தீனர்களின் உறுதியான போராட்டத்தை நலிவடையச் செய்துவிடாது. பலஸ்தீன மக்களின் தார்மீகப் போராட்டம் என்பது பலஸ்தீன மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் என்ற குறுகிய வட்டத்தின் உள்ளே அடங்குவதில்லை. அது முழு சர்வதேச முஸ்லிம்களினதும் போராட்டம். தமது மார்க்கத்தோடும் நபியோடும் அல்குர்ஆனிய வசனங்களோடும் தொடர்புபட்ட புனிதமான போராட்டம். இப்போராட்டம் வெற்றிபெற சர்வதேச குத்ஸ் தினமான இன்று நாம் பிராத்திப்போமாக.

"பலஸ்தீனத்தின் விடுதலை எப்போது என்று அவர்கள் உம்மை நாடுகிறார்கள் நபியே சொல்லுங்கள், அது மிக அண்மையில் இருக்கமுடியும்".

**கடந்த 50 வருட கால வரலாற்றில் பலஸ்தீன் மக்கள் மீது ஸியோனிஸ்டுகளால் மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய கறை படிந்த நிகழ்வுகள்:**

| தாக்குதல் இடம்பெற்ற திகதி | தாக்குதல் மேற்கொள் -ளப்பட்ட பகுதி | சேதம் பற்றிய விபரங்கள் |
|---|---|---|
| 31.12.1947 | பல்ததுஷ் ஷெய்க் | சுமார் 600 பலஸ்தீனர்கள் படுகொலை செய்யப்பட்டனர். |
| 14,15.02.1948 (இரவுகளில்) | ஜலீல் பகுதியில் அமைந்துள்ள ஸ.ஃ.ஸ.ஃ. எனும் கிராமம். | பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்களைக் கூடப்பார்க்காது 20 வீடுகள் தகர்க்கப்பட்டன. |
| 31.03.1943 | அபுகபீர் எனும் கிராமம் | பெருந்தொகையானோர் அகோரமாகக் கொல்லப்பட்டனர். |
| 09.04.1948 | குத்ஸ் நகருக்கு அருகிலுள்ள தைர் யாஸீன் கிராமம் | குழந்தைகள், வயோதிபர்கள் பெண்கள், சிறுவர்கள் உட்பட 254 பேர் மிக மோசமாகப் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் 15 க்கும் மேற்பட்ட வீடுகளும் தரைமட்டமாக்கப்பட்டன. |
| 14.05.1944 | அபூசோஷால் கிராமம் | 50க்கும் மேற்பட்ட பலஸ்தீனிய உயிர்கள் ஷஹீதாக்கப்பட்டன. |
| 23.05.1948 | ஹைபா நகரின் வடக்கே 30 km தூரத்தில் அமைந்துள்ள தன்தூரா எனும் கிராமம் | இரவோடு இரவாக 200க்கும் மேற்பட்ட நகரவாசிகள் மிகப் பரிதாபமான முறையில் கொல்லப்பட்டனர். |
| 11.07.1948 | லித் நகர் | 426 பேர் ஷஹீதாக்கப்பட்டனர். இவர்களில் 176 பேர் தர்மஸ் பள்ளியில் வைத்து கொல்லப்பட்டனர். |
| 29.10.1948 | குப்ர் காஸிம் பகுதி | 49பேர் படுகொலை செய்யப்பட்டனர். |

| | | |
|---|---|---|
| 30.10.1948 | இலபூன் கிராமம | இக்கிராம மக்களை ஒரு பொது மைதானத்தில் ஒன்று சேர்த்து நாலா திசைகளில் இருந்தும் அவர்கள் மீது வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இதில் கொல்லப்பட்டவர்களின் விபரங்கள் வெளியிடப்படவில்லை. |
| 14.10.1953 | குபையா கிராமம் | 67 பலஸ்தீன் உயிர்கள் பலியாக்கப்பட்டன. |
| 28.05.1954 | பைத் லஹும் பகுதிக்கு அண்மையில் உள்ள பல்ததுன் நஹாலீன் | 13 பேர் கொல்லப்பட்டதுடன் 17 பேர் படுகாயங்களுக் குள்ளானார்கள். |
| 10.10.1956 | கல்கையியா பகுதி | 70க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். |
| 15.15.1956 | காஸா பகுதியில் அமைந்துள்ள கான்யூனுஸ் கிராமம் | சுமார் 275 பலஸ்தீனர்கள் அகோரமான முறையில் கொல்லப்பட்டனர் |
| 13.03.1976 | குத்ஸ் நகர் | குத்ஸ் நகர் ஆக்கிரமிக்கப்பட்டதை ஆட்சேபித்து நடாத்தப்பட்ட ஊர்வலத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலில் 6 பேர் ஷஹீதாகினர். மற்றும்பலர் காயமுற்றனர். |
| 18.09.1982 | பெய்ருத்தின் வடபகுதியில் அமைந்துள்ள ஷதீலா,ஸப்ரா ஆகிய இருஅகதிமுகாம்கள் | இது ஒரு கொடூரமான தாக்குதல நடவடிக்கை. இத்தாக்குதலில சியோனிசப் படையினருக்கு ஆதரவாக மலேசியப் படையினரும் இணைந்து சுமார் 3500 பலஸ்தீனிய அகதிகளைக் கொன்று குவித்தனர். |
| 13.04.1989 | பலததுன் நஹாலன | 5 பேர் கொல்லப்பட்டதுடன் இன்னும் பலர் படுகாயமுற்றனர். |
| 08.10.1990 | குத்ஸ் புனித பூமி | குத்ஸ் புனித பூமியில் தொழுது கொண்டிருந்த போது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 21 பேர் ஷஹீதாக்கப்பட்டதுடன் 150க்கும் மேற்பட்டோர்படுகாயங்களுக்கு உள்ளாகினர் |

| | | |
|---|---|---|
| 25.02.1994 | மஸ்ஜிதுல் இப்ராஹிமியா | இப்பள்ளியில் தொழுது கொண்டிருந்த 29 நோன்பாளிகள் சியோனிச வேட்டுக்களுக்கு ஷஹீதாகினர். |
| 18.04.1996 | காணாப் பகுதி | லெபனான் நகரவாசிகள் வசிக்கும் தொடர்மாடி ஒன்றின்மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் உட்பட சுமார் 160 பேர் மிலேச்சத்தனமாகக் கொல்லப்பட்டனர். |
| 10.03.1998 | புல்தது்த் தூர்கூமியா | 3தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர் |
| 14.05.1988 | குத்ஸ் நகர் | பலஸ்தீன் ஆக்கிரமிக்கப்பட்டு 50வது ஆண்டுகள் நிறைவினையொட்டி நடாத்தப்பட்ட ஆட்சேபனை ஊர்வலத்தின் மீது இஸ்ரேலியப் படையினர் மேற்கொண்ட வன்முறை நடவடிக்கைகளில் 9 பேர் கொல்லப்பட்டதுடன் சுமார் 150 பேர் படுகாயங்களுக்குள்ளாகினர். |
| 29.09.2000 | குத்ஸ் நகர் | சியோனிச ஆக்கிரமிப்பாளர்கள் இந்நகரின் பல பகுதிகளிலும் நடாத்திய வன்முறைத் தாக்குதல்களில் 7 பேர் கொல்லப்பட்டதுடன் 230 பேர் படுகாயமுற்றனர். மேலும் இவர்களில் இன்றுவரை பலஸ்தீன் முழுவதும் தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர்.10.10.2000 வரை இவர்களது தாக்குதல்களில் 35பேர் வரை கொல்லப்பட்டதுடன் 1000 க்கும் மேற்பட்டோர் படுகாயமுற்றுள்ளனர். இவர்களில் பலர் மிக அபாயமான நிலையில் இருந்தார்கள். |

| | | |
|---|---|---|
| 20.10 2003 | காஸாப் பகுதி | பாலஸ்தீனப் போராளிகளின் தாக்குதலுக்கு பழி வாங்க இஸ்ரேல் விமானக் குண்டு வீச்சு. மக்கள் அழிவைத் தடுக்க சர்வதேச நாடுகளை தலையிடுமாறு மத்தியகிழக்கு சமாதானப் பேச்சாளர் சஈப் பர்காத் வேண்டுகோள். |

## References:


Abu-Lughod .J (1971) : The Demographic Transformation of Palestine. in The Transformation of Palestine, North western Univ. Press.

Adams Michal, Mayhew Christoper, (1992) : Publish it not..... The Middle East Cover-Up, Islamic Propagation center international, Longman Group Ltd. London, ISBN 0582 780594

Garavdy. R (1997) : Founding Myths of the Israli Policy IPP Printers & Publisher & UASR Publishing Group. ISBN 1- 882669 – 09-6.

Mahoney.J.F. (1992) : Lest the Civilzed World Forget The Colonizaion of Palestine, Americans for Middle East Understanding, inc New York. 10115.

O' Balance.E (1957) : The Arab- Israeli War, 1948, Praeger.

Rosenthal. F. (1968) : A History of Muslim Histoigraphy, Leiden: E.J. Brill.